# மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel



சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 06 திங்கட்கிழமை 22.09.2025 கதிர் 317




## “பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பது போல் தமிழரின் மரபுரிமை சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடு”

### நல்லூர் மந்திரிமனை முன்பாக முன்பாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் எனக் கோரி நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனை முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இராச்சியத்தின் மன்னனான சங்கிலிய மன்னன் காலத்து மந்திரிமனை கடந்த 17ஆம் திகதி பெய்த மழை காரணமாக அதன் ஒரு பாகம் இடிந்து விழுந்திருந்தது.

குறித்த தொல்லியல் சின்னத்தைத் தொல்லியல் திணைக்களம் பாதுகாக்க தவறி விட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், அது தனியார் காணிக்குள் அமைந்துள்ள தனியார் சொத்து எனவும், அதனால் தம்மால் அதனை

7

# தவறான வழியில் அநுர அரசு பயணம்

## முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 22

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு தற்போது தவறான வழியில் பயணித்துக்கொண்டிருக்கின்றது.” - என்று முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்கள் கவலையில் உள்ளனர். வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கின்றது. அரசின் பயணம் தவறு என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

எனது அரசியல் பயணம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இறுதி மூச்சு இருக்கும் வரை அரசியல்வாதிகளால், அரசியலை விட்டுச் செல்ல முடியாது. அவ்வாறு செல்வோம் எனக் கூறுவது பொய்.

எதிரணிகளின் வேலைத்திட்டம் என்னவென்பது பற்றி அவதானித்துக் கொண்டிருக்கின்றேன்.” - என்றார்.

### ஐ.நா. பொதுச் சபை அமர்வில்

## பாலஸ்தீனத்துக்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவுள்ள ஜனாதிபதி அநுர

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் நாளைமறுதினம் புதன்கிழமை உரையாற்றவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க, பாலஸ்தீனத்துக்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவுள்ளார். ஐ.நா. பொதுச்

7



## நுவரெலியா விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

நுவரெலியா, செப். 22

கோர விபத்தில் மோட்டார் சைக்கிள்ஓட்டுநர்படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இன்று காலை

7



## யாழில் வேலைவாய்ப்பற்ற இளையோருக்குத் தொழிற்சந்தை







யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இளைஞர், யுவதிகளுக்காக வேலைவாய்ப்பு தொழிற்சந்தை இன்று இடம்பெற்றது.

சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் அனுசரணையில் யாழ். மாவட்ட செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து இந்தத் தொழிற்சந்தையை

7

# நடமாடும் சேவைகள் வாரம் இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, செப் .22

நடமாடும் சேவைகள் வாரம் இன்று (22) முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வு தொழிலாளர் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகியது.

இன்று ஆரம்பிக்கப்படும் இந்த திட்டத்திற்கு அமைய, நடமாடும்சேவைகள்வாரத்தை நாடு முழுவதும் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதி உறுப்பினர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது, வேலை வாய்ப்பு கண்காட்சிகள் மூலம் வேலைவாய்ப்புகளை வழங்குதல், சட்ட ஆலோசனை மற்றும்வழிகாட்டுதல் உள்ளிட்ட தொழிலாளர் அமைச்சகத்திற்குச் சொந்தமான பல சேவைகளை இதன்மூலம்பெறமுடியும்என்று அமைச்சகம்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பத் மனம்பேரியால் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கிகள் மித்தெனிய பகுதியில் இருந்து மீட்பு!

கொழும்பு, செப் .22

மித்தெனிய பகுதியில் உள்ள ஒரு காணியில் இருந்து சம்பத் மனம்பேரியால் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது இரண்டு தங்க நிற மெகசின்கள், ஒரு 9 மிமீ பிஸ்டல், ஒரு கைக்குண்டு மற்றும் 115, வு-56 தோட்டாக்கள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் சம்பத் மனம்பேரியி மற்றும் பெக்கோ சமனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெக்கோ சமன் இந்த துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை 2 மாதங்களுக்கு முன்பு சம்பத் மனம்பேரியிடம் கொடுத்ததாகவும், அவை அவரது நெருங்கிய ஒருவரின் வீட்டில் புதைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மூன்றாம் திகதி காணி ஒன்றில் இந்த ஆயுதங்களை புதைத்து வைத்திருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மிதெனிய - தலாவ பகுதியில் உள்ள ஒரு நிலத்தில் இருந்து ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சம்பத் மனம்பேரி, கடந்த 17ஆம் திகதி வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, விசாரணை செய்ய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை

முல்லைத்தீவு கடற்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுப்பதற்காக ரோந்து நடவடிக்கைளை அதிகரிக்குமாறு கடற்படையினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளருக்கும், கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில்,நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் பணிப்பின் பேரில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் கோலித கமல் ஜினதாச மற்றும் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் சுதாகரன் ஆகியோர், மீனவ பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன்போது மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் கோரிக்கைகளும் உள்வாங்கப்பட்டன.இதையடுத்து முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை தளத்திற்கு விஜயம் செய்து, சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த கடற்படை ரோந்து நடவடிக்கையை அதிகரிக்குமாறு வலியுறுத்தினர்.

பின்னர் புல்மோட்டை கடற்படைத் தளத்திற்கு சென்று அங்குள்ள கடற்கடை அதிகாரி மற்றும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரியுடன் கலந்துரையாடி உடன் அமுலுக்கு வரும் வகையில் முகத்துவார வாயில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.இச்சந்திப்புகளில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் பங்கேற்றிருந்தார்





# 35வது ஆண்டு நினைவேந்தல்





மட்டக்களப்பு , செப் .22

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்களில் 35 வது ஆண்டு நினைவேந்தல் ஞாயிற்றுக்கிழமை (21) அன்று மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி இரவு 7 - 8 மணியளவில் புதுக்குடியிருப்பு கிராமத்துக்குள் புகுந்த இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து ஊர்காவல் படையினரும் வீடுகளின் உறங்கிக் கொண்டிருந்தவர்களின் 45 அப்பாவி தமிழ் மக்களை தூக்கத்திலிருந்து எழுப்பி விசாரணைக்கென கடற்கரை பகுதிக்கு ஓதுக்கிக் சென்றுள்ளனர். விசாரணக்கொன அழைத்துச் சென்றவர்களில் சிலர் உயிர் தப்பிய உள்ள போதிலும் நள்ளிரவு வேளை பெண்கள் சிறுவர்கள் உட்பட 17 பேர் கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

இவர்களது சடலங்கள் துப்பாக்கி காயம் மற்றும் வெட்டுக் காயங்களுடன் பிரதேச மக்களால் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. உயிரிழந்தவர்களின் நினைவாக புதுக்குடியிருப்புபில் அமைக்கப்பட்டநினைவுத் தூபி முன்றலில் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் ஈகை சுடர் ஏற்றப்பட்டு,மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்தப் படுகொலையில் 09 ஆண்கள் 08 பெண்கள் சிறுவர்கள் என17 படுகொலை செய்யப்பட்டிருந்தனர். குறித்த படுகொலைச் சம்பவம் நடைபெற்று 35 ஆண்டுகள் கடந்த போதிலும் இதுவரை நீதி கிடைக்கவில்லை என இறந்தவர்களின் உறவினர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (ஐ)

## முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்துக்கு முன் பாரிய ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு , செப் .22

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்துக்கு முன் பாரிய ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் முறைகேடான இடமாற்றங்கள் மற்றும் ஆசிரியர் ஒருவரை அதிபராக நியமிக்க எடுக்கப்பட்ட முடிவு ஆகியவற்றுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் இன்றையதினம்(22.09.2025) குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போராட்டத்திற்கான மனு, ஆளுநர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு அரசாங்க அதிபர், வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு அனுப்பப்படவுள்ளது.

ஆளுநருக்குரிய மனுவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கான மனுவும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் போராட்டக் களத்தில் வைத்து கையளிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைக்கு வருகை தந்திருந்த முல்லை கோட்டக்கல்வி பணிப்பாளர் திருக் குமரனிடம் குறித்த விடயம் தொடர்பில் வினவிய போது, தாம் ஊடகங்களுக்கு கருத்து கூற முடியாதெனவும் வலயக்கல்வி பணிப்பாளரேகருத்துகூறமுடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த போராட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான வீ.கலைச்செல்வன், ஜெ.சிவ சாந்தி, பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர், பழைய மாண வர்கள், நலன் விரும்பிகள், பொது அமைப்புக்கள்என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## ஒரு வருடத்தில் மாற்றத்திற்கான பல முக்கிய தீர்மானங்கள்: ரில்வின் சில்வா பெருமிதம்




கொழும்பு, செப் .22

நாட்டின் பரிமாண மாற்றத்திற்கான பல முக்கிய தீர்மானங்களை ஒரு வருட காலத்தில் எடுத்துள்ளதோடு அதில் நாம் பெரும் மகிழ்ச்சி கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“கடந்து வந்த ஒரு வருடத்தில் எமக்கு பெரும் சவால்கள் இருந்தன. அதிகம் முயற்சித்தோம், ஒரு வருடம் கடந்தது தெரியவில்லை. வேகமாக சென்றுள்ளது.

நாங்கள் இந்த நாட்டில் பொருளாதாரம் மற்றும் சமூக, கலாசார மாற்றத்தை ஏற்பத்துவதே வாக்குறுதியாகும். அதை சுலபமாகசெய்துவிட முடியாது.நடைமுறையில் இருந்த பழைமையை மாற்ற முற்படும் போது அதன் தாக்கங்கள் பலமாக இருக்கும்.

அதற்கு முகம் கொடுத்தே முன் செல்ல வேண்டியுள்ளது. எமது முதல் படிமுறை புதிய அரசியல் கலாசாரம். அதாவது, மக்கள் பணத்தை வீணடிக்காத, ஊழல் மோசடி, நெருக்கமானவர்களுக்கு வரப்பிரதாசம் வழங்கல் ஆகியவற்றில் பாரிய மாற்றம் நிகழ்ந்துள்ளன்.

ஜனாதிபதி முதல் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஊழலற்ற, கப்பம்பெறாதவர்களாக உள்ளனர். அதை நான் உறுதிப்படுத்துகிறேன். அரசியல் வாதிகளின் வரப்பிரசாதங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

சாதாரண அரசியல்வாதிகளாக உள்ளனர். 2048ஆம் ஆண்டே நாட்டை மாற்ற முடியும் என சொன்னார்கள். ஆனால் நாம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.

மேலும்பலநிவாரணங்களைசெய்துள்ளோம். அரசாங்கத்தின் செலவுகளை குறைத்து அர்ப்பணிப்புள்ள ஒரு அரசாங்கம் என்பதை காட்டியுள்ளோம்” எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாமல் ராஜபக்சவே எதிர்காலத்தலைவர்..! ரோஹித வலியுறுத்தல்

கொழும்பு, செப் .22

நாமல் ராஜபக்சவே இந்நாட்டின் எதிர்காலத் தலைவர் என்ற வகையில் அவரை வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்என்று ரோஹித அபேகுணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண கட்சியுடன் மீண்டும் இணைந்து செயற்படுவது குறித்து ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், நான் பதவிகளை எதிர்பார்த்து அரசியல் செய்வது கிடையாது. பதவிகள் தான் என்னைத் தேடி வந்துள்ளது.

அமைச்சர் பதவிகளைக் கூட நான் பல தடவைகள் நிராகரித்துள்ளேன். அதேபோல நான் மொட்டுக் கட்சியை விட்டும் விலகவும் இல்லை. மொட்டுக் கட்சி என்னை விலக்கவும் இல்லை.

தற்போதைய நிலையில் நாமல் ராஜபக்சவே இந்நாட்டின் எதிர்காலத் தவைராகும் சாத்தியத்தைக் கொண்டுள்ளார். அவரை வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதற்காக அனைவரையும் ஒன்றிணைப்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

மொட்டுக் கட்சியை விட்டும் விலகிச் சென்றவர்கள் அனைவரும் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)



# உத்தரகாண்ட் நிலச்சரிவின் மீட்பு பணியில் தாயின் மார்பை அணைத்தபடி இரட்டை குழந்தைகளின் சடலம் மீட்பு: காண்போர் நெஞ்சை பதறவைத்த சோகம்



உத்தரகாண்ட் நிலச்சரிவில் இறுதி நிமிடம் வரை தன் பிள்ளைகளை காக்க போராடிய தாயின் பாசப்போராட்டம் சோகத்தில் முடிந்தது. உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டம் நந்தநகர் பகுதியில் கடந்த 17ம் தேதி இரவு ஏற்பட்ட திடீர் மேகவெடிப்பு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த கோர சம்பவத்தில் பல வீடுகள் இடிபாடுகளில் புதைந்தன. இதைத்தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்ற நிலையில், இடிபாடுகளில் இருந்து தாய் மற்றும் அவரது இரட்டை குழந்தைகளின் உடல்கள் மீட்கப்பட்ட சம்பவம் அனைவரையும் உலுக்கியுள்ளது.

மாயமானவர்களை தேடும் பணியின் போது, தாய் மற்றும் அவரது இரண்டு குழந்தைகளின் உடல்கள் ஒன்றாக மீட்கப்பட்ட காட்சி காண்போரை கலங்கடித்துள்ளது. மீட்புக்குழுவினர் இடிபாடுகளை அகற்றியபோது, 38 வயதான காந்தா தேவி என்ற பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது. அவர் தனது 10 வயது இரட்டை மகன்களான விஷால் மற்றும் விகாஸ் ஆகிய இருவரையும் தனது மார்போடு இறுக்க அணைத்தபடி இறந்து கிடந்தார். 'இறுதி நிமிடம் வரை தன் குழந்தைகளை காப்பாற்ற அந்த தாய் போராடியிருக்கலாம்' என்பதைப் போல அந்த காட்சி அமைந்திருந்தது.

இதே இடிபாடுகளில் சிக்கியிருந்த காந்தா தேவியின் கணவர் குன்வர் சிங், 16 மணி நேர போராட்டத்திற்குப் பிறகு கடந்த 18ம் தேதி உயிருடன் மீட்கப்பட்டார். ஆனால், தனது மனைவி மற்றும் குழந்தைகள் உயிரிழந்த செய்தி கேட்டு அவர் நிலைகுலைந்து போனார். தனது மொத்த குடும்பத்தையும் ஒரே நாளில் இழந்த சோகத்தில் அவர் மூழ்கியுள்ளார். இந்த துயர சம்பவம் நந்தநகர் பகுதி மக்களை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உத்தரகாண்ட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

# செருப்புடன் வேல் ஏந்திய விஜய்: பாய்ந்து வந்த பாஜக



தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவர் விஜய்க்கு, நாகையில் கட்சித் தொண்டர் ஒருவர் வேல் பரிசாக அளித்தார். அதனைபெற்றுக்கொண்டு உற்சாகமாக கையசைத்தார் விஜய். இந்நிலையில், விஜய் வேலை ஏந்தியபோது காலில் செருப்பு அணிந்திருந்தார் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) யினர் விமர்சனம் வைத்துள்ளனர். "காலில் செருப்பு அணிந்தபடியே வேலை பிடித்த ஜோசஃப் விஜய். இந்து மதத்தை பற்றி தெரியுமா?" என பாஜக தொண்டர் ஒருவர் காட்டமாக விமர்சித்துள்ளார்.

தமிழக அரசியல் களத்தில் 'வேல்' தொடர்ச்சியாக பேசுபொருளாக இருந்து கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்களுக்கு வேல் அன்பளிப்பாக அளிப்பது, முருகன் பற்றிப் பேசுவது என அதைச் சுற்றி அரசியல் நடந்து வருகிறது. எதிர்க்கட்சிகளுக்கு டஃப் கொடுக்கும் வகையில் திராவிட முன்னேற்ற கழகம் (திமுக) அரசே அண்மையில் பழனியில் முத்தமிழ் முருகன் மாநாட்டையும் நடத்தியது.

இந்நிலையில், தவெக தலைவர் விஜய்யும் வேல் ஏந்தியுள்ளார். தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணத்தை தொடங்கி உள்ள உள்ள விஜய் சனிக்கிழமை (20) அன்று நாகை மாவட்டம், அண்ணா சிலை அருகே இன்று பிரச்சாரம் செய்தார். அப்போது,"எல்லாருக்கும் என் அன்பான வணக்கம். எப்படி இருக்கீங்க? பண்றீங்களா? கடல்தாய் மடியில் இருக்கும் நாகப்பட்டினத்தில் நின்று பேசுவதால் எனக்கு பெரும் மகிழ்ச்சி. இந்த ஊர் என் மனசுக்கு மிகவும் நெருக்கமானது" என்று பேசத் தொடங்கினார்.

மேலும், "விவசாயிகள் பிரச்சனையை தீர்க்க காவிரி தண்ணீரை கொண்டு வர அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை. கடல்சார் கல்லூரி, மீன் தொழிற்சாலை போன்றவை அமைக்க முடிந்திருக்கலாம். ஆனால் இன்று வரை செய்யப்படவில்லை. வெளிநாட்டு முதலீடுகளை பற்றி சிரித்துக்கொண்டே பேசும் முதல்வர் சார் நேர்மையாக சொல்லுங்க, வெளிநாட்டு முதலீடா? அல்லது வெளிநாட்டில்தான் முதலீடா?" என்று கேள்வி எழுப்பினார் விஜய்.

இந்நிலையில், விஜய் வாகனம் மீது ஏறி தொண்டர்களுக்கு கையசைத்து வணக்கம் கூறினார். அப்போது, தொண்டர் ஒருவர் விஜய்க்கு ஆள் உயர வேல் ஒன்றை பரிசாக அளித்தார். விஜய் வேலை பெற்றுக் கொண்டு தொண்டர்களிடம் காண்பித்தபடி கையசைத்தார். தமிழக அரசியல் களத்தில் வேல் முக்கியப் பாத்திரம் வகித்து வரும் சூழலில் திருச்சியில் முதல் பிரச்சார பயணத்தை தொடங்கிய தவெக தலைவர் விஜய்க்கு, அக்கட்சித் தொண்டர்கள் முருகனின் வேலை பரிசாக வழங்கினர். அதேபோல நாகையிலும் பெரிய வேல் பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிலையில், விஜய் வேலை ஏந்தியபோது செருப்பு அணிந்திருந்தார் பாஜகவினர் விமர்சனம் வைத்துள்ளனர். "காலில் செருப்பு அணிந்தபடியே வேலை பிடித்த ஜோசஃப் விஜய். இந்து மத்தத்தை பற்றி தெரியுமா? தமிழ்நாட்டில் உள்ள நடுநிலை இந்துக்கள், இந்து இளைஞர்கள், தோழிகள் தான் உணர வேண்டும்..." என பாஜக தொண்டர் ஒருவர் காட்டமாக விமர்சித்துள்ளார். மேலும், தமிழ் கடவுள் முருகனை விஜய் அவமதித்து விட்டதாகவும் விமர்சித்துள்ளனர்.

விஜய் பற்றி பாஜக தொண்டர்கள் மத ரீதியில் விமர்சனம் வைத்த நிலையில், தவெக தொண்டர்கள் அந்த நபருக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர். அன்பளிப்பாக கொடுத்த வேலை செருப்பு அணிந்தபடி வாங்கியது குற்றமா என பதிவிட்டு வருகின்றனர். முன்பு, அண்ணாமலை காவடி தூக்கியபோது காலணி அணிந்திருந்ததைக் குறிப்பிட்டும் பலர் விமர்சித்துள்ளனர். (ஐ)

# பிரபாகரன் "ஒரு தாயைப் போன்றவர்": விஜய்

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இலங்கை தமிழ் மக்களுக்கு "ஒரு தாயைப் போன்றவர்" என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் நடந்த தேர்தல் பேரணியில் தெரிவித்துள்ளார்.

"உலகின் எந்த மூலையில் இருந்தாலும், எங்கள் உறவினர்களான ஈழத் தமிழ் மக்கள், தாய் பாசத்தைக் காட்டிய ஒரு தலைவரை இழந்து தவிக்கின்றனர். எனவே, அவர்களுக்காகப் பேசுவது எங்கள் கடமை."எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாகப்பட்டினம் போன்ற பெரிய கடற்றொழில் சமூகம் உள்ள பகுதிகளில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை ஓர் உணர்ச்சிகரமான பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

2008 ஆம் ஆண்டில், இலங்கைத் தமிழர்களின் சார்பாக விஜய் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். இருப்பினும், அரசியல் விமர்சகர்கள் இலங்கைத் தமிழர்களை ஆதரிப்பதும், இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரிப்பதும் ஒன்றல்ல என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரபாகரனைப் புகழ்வதைத் தவிர, கடற்றொழில் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தனது கட்சியின் முக்கிய குறிக்கோள் என்று விஜய் கூறினார்.

மேலும், எம்.கே. ஸ்டாலின் அரசாங்கத்தையும் விமர்சித்த அவர், மீன்பிடிப் பிரச்சினைகளைத் தீர்க்க தனது கட்சி நீண்ட கடிதங்களை எழுதாது, மாறாக தீர்வுகளைத் தேடும் என்றும் கூறினார்.

"கடற்றொழிலார்களின் உயிர்கள் முக்கியம். ஆனால் ஈழத் தமிழர்களின் உயிர்களும் எங்களுக்கு சமமாக முக்கியம்" என்று கூறி முடித்தார். (ஐ)

# திமுகவை விமர்சனம் செய்பவர்களின் கனவு 2026ம் ஆண்டு பொய்த்துபோகும்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி



திமுகவை விமர்சனம் செய்பவர்களின் கனவு 2026ம் ஆண்டு பொய்த்துபோகும் என பிராட்வேயில் நடந்த அன்னம் தரும் அமுதகரங்கள் என்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறியுள்ளார். சென்னை பிராட்வே ஜீலஸ் தெருவில் அன்னம் தரும் அமுதகரங்கள் என்ற நிகழ்ச்சி இன்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது: முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சி மூலம் பொதுமக்களுக்கு உணவு வழங்கி வருகிறோம். 214வது நாளாக அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சி மூலம் 428 இடங்களில் உணவு வழங்கி வருகிறோம்.

கேரளாவில் நேற்று திருவிதாங்கூர் தேவஸ்தானம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தமிழ்நாட்டிற்கு என்ன கோரிக்கை வைக்கப்பட்டது என்ற கேள்விக்கு, தமிழக எல்லை பகுதியில் உள்ள கண்ணகி கோயிலுக்கு நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிக்கவேண்டும். அங்கு கட்டிடம் கட்டுவதற்கான பணிகளையும், கோயிலுக்கான வழிபாதை செய்து தரும்படி கோரிக்கை வைக்கப்பட்டது. கேரளாவில் உள்ள ஐயப்பன் கோயிலுக்கு மார்கழி மாதத்தில் தமிழகத்தில் இருந்துதான் அதிக பக்தர்கள் செல்கிறார்கள்.

எனவே, ஐயப்ப பக்தர்கள் தங்குவதற்கான கட்டிட பணி நடைபெறும் என கூறியுள்ளனர். இதுபோல் பழனியில் 5 ஏக்கர் பரப்பளவில் கோயில் பணி மேற்கொள்ள அவர்கள் இடம் கேட்டுள்ளனர். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக கேரள முதலமைச்சர் தெரிவித்துள்ளார். கேரள ஐயப்பன் கோயில்களில் மண்டல மற்றும் மகர பூஜை காலங்களில் வரும் தமிழக பக்தர்களுக்காக மருத்துவ வசதிக்காக கன்னியாகுமரி தேவஸ்தானத்தை சேர்ந்த 2 அதிகாரிகள் உள்ளனர். அவர்களுக்கு அறை, உணவு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. மேலும் ஒரு சில வசதிகள் ஏற்படுத்தி தரவேண்டும் என கேட்டுக்கொண்டேன்.

திமுகவை தவெக தலைவர் விஜய் விமர்சனம் செய்தது குறித்தான கேள்விக்கு, விஜய்க்கு ஆர்.எஸ்.பாரதி உரிய பதிலளித்துள்ளார். அதுவே போதுமானது. அதனால் அதுபற்றி பேசவேண்டாம். மதுரை மீனாட்சி அம்மன் குட முழுக்கு பணி எவ்வாறு நடைபெற்று வருகிறது என்ற கேள்விக்கு, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு பணி சிறப்பாக சென்றுகொண்டிருக்கிறது. ஜனவரி மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்தி முடிக்கவேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

நிச்சயம் நடக்கும், திமுக ஆட்சியில்தான் பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. ஜனவரி மாதத்திற்குள் மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு நடத்தப்படும். புதிதாக கட்சி தொடங்கிய தவெக, அதிமுக, பாஜக, பாமக என அனைத்து கட்சிகளும் திமுக மீது கடும் விமர்சனம் வைக்கிறார்கள் என்ற கேள்விக்கு, காய்த்த மரத்தில்தான் கல்லடிப்படும் என சொல்வார்கள். இதனால் பெரிதாக எடுத்துக்கொள்ளவேண்டாம். அனைவரும் பார்த்து நடுங்குகின்ற ஆட்சியாக திமுக ஆட்சி உள்ளது. இவர்களின் கனவு 2026ம் ஆண்டு பொய்த்து போகும். இவ்வாறு அமைச்சர் கூறியுள்ளார். நிகழ்ச்சியில், திமுகவினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# நலம் தரும் நவராத்திரி





புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் தொடங்கி ஒன்பது நாட்கள் வரையில் நவராத்திரியாக அனைவரும் கொண்டாடுகிறார்கள். பத்தாவது நாள் விஜயதசமி நாளையும் இணைத்து மொத்தம் பத்து நாட்கள் நவராத்திரி விழா முடியும். ஆனால் இந்த ஆண்டு ஒன்பது நாட்களோடு இன்னும் இரண்டு நாட்கள் சேர்ந்து நவராத்திரியை சிறப்பாக்குகிறது. ஆம், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் 11ம் தேதி விஜயதசமியையும் சேர்த்து மொத்தம் 11 நாட்கள் நவராத்திரி விழா கொண்டாடப்படவிருக்கிறது.

நவராத்திரி நாட்களில், ஒவ்வொரு நாட்களும் கோலங்கள், தானியங்கள் என ஒன்பது விதமாக, பெண் குழந்தைகளை தேவியாக பாவித்து பூஜிக்க வேண்டும். குழந்தைகள் முதல் மூதாட்டி வரையான பெண்களை அம்பாளாகவே கண்டு வணங்க வேண்டும் என்பது ஐதீகம். பத்து நாட்கள் வீட்டில் கொண்டாடப்படும் ஒரே விழாவாக நவராத்திரி இருப்பதால், வீட்டை அழகுபட அலங்கரிக்க வேண்டும். பலவித பொம்மைகளால் கொலு அமைத்து, விரதம் இருந்து, வீட்டிற்கு வரும் சுமங்கலி பெண்கள் மற்றும் கன்னி பெண்களுக்கு தகுந்த உபசரிப்பு செய்து, அவர்களை மகிழ்விக்கிறோம். இதனால், முப்பெருந்தேவியரும் நம் இல்லத்தில் வாசம் செய்வார்கள் என்றும், அவர்களின் பரிபூரண ஆசி மற்றும் அனைத்து சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நமது முன்னோர்களின் நம்பிக்கை.

நவராத்திரி முதல் மூன்று நாட்கள் லட்சுமிக்கும், அடுத்த மூன்று நாட்கள் சக்திக்கும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் உரியதாக தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த ஒன்பது நாள் நவராத்திரியை வட மாநிலங்களில் துர்கா பூஜை என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். மேலும், நவராத்திரியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அம்பிகையை அலங்கரித்து வழிபடுவது நமது மரபாக இருக்கிறது.

அனைத்து நவராத்திரி விழாக்களும் இரவு நேரங்களில் மட்டுமே பூஜை செய்யப்படும். இந்த பூஜைகள், தேவர்கள் செய்யப்படுவதாக கருதப்பட்டு, இரவில் நாவராத்திரியை வழிபடுகிறார்கள். மறுநாள் விஜயதசமி அன்றுதான், பெரும்பாலனவர்கள் தங்களது குழந்தைகளுக்கு புதிய கல்வி கற்பிப்பதைத் முறையாக தொடங்குவார்கள்.

ஒன்பது மலர்கள், ஒன்பது பழங்கள், ஒன்பது தானிங்கள், ஒன்பது பிரசாதங்கள், ஒன்பது விதமான அலங்காரங்கள், என ஒன்பது விதமான நிவேதனங்களால் முப்பெருந்தேவியரையும் பூஜித்து வழிபடுவது நவராத்திரி விழாவின் சிறப்பம்சமாகும். இவற்றுடன், கோலங்கள், பொட்டுக்கள், திரவியங்கள், தானங்கள், மந்திரங்கள், வாத்தியங்கள், பெயர்கள் என ஒவ்வொன்றும் ஒன்பது விதமாக அலங்கரிக்கப்படுகிறது.

நவராத்திரியின் ஒன்பது நாட்களும் ஒன்பது விதமாக அம்பிகையை பூஜித்து வழிபாட வேண்டும். இதனால், நம் வாழ்க்கை இன்னும் அழகாகும், நலம் பெறும் என்பதே இவ்விழாவின் தாத்பரியம்

# தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு குழந்தைகள் உள்பட 30 பேர் பலி: பாகிஸ்தான் ராணுவம் நடவடிக்கை



பாகிஸ்தான் விமானப்படை சொந்த நாட்டு மக்கள் மீது நடத்திய வான்வழித் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தான் மாகாணங்களில், தெஹ்ரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் டிடிபி அமைப்புடனான போர் நிறுத்தம் முறிந்ததில் இருந்து அங்கு தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, டிடிபி தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதாக பாகிஸ்தான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. மேலும், கடந்த மே மாதம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்த தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா 'சிந்தூர் நடவடிக்கை' என்ற பெயரில் தாக்குதல் நடத்தியது.

இதைத் தொடர்ந்து ஜெய்ஷ்-இ-முகமது, ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற தீவிரவாத அமைப்புகள் கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் உள்பகுதிகளுக்கு தங்கள் தளங்களை மாற்றின. இந்த சூழலில், கடந்த சில மாதங்களாகவே பாகிஸ்தான் ராணுவம் அந்த மாகாணத்தில் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பள்ளத்தாக்கு பகுதியில் பாகிஸ்தான் விமானப்படை நேற்று திடீர் வான்வழித் தாக்குதலை நடத்தியது. சீனத் தயாரிப்பான ஜே.எப்-17 ரக போர் விமானங்கள் மூலம் சுமார் 8 குண்டுகள் வீசப்பட்டதாக செய்தி வெளியாகி உள்ளன. இந்த கொடூர தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 30 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் அரசியல்வாதியான இக்பால் அப்ரிடி குற்றம்சாட்டியுள்ளார். பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் பாகிஸ்தானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த வான்வழித் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அரசு இதுவரை அதிகாரப்பூர்வமாக எந்த தகவலையும் வெளியிடவில்லை. (ஐ)

## பக்ராம் விமான தளத்தை எங்ககிட்ட கொடுங்க: அமெரிக்கா எச்சரிக்கை: தலிபான் மறுப்பு



*அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மைய கட்டிடம் கடந்த 2001ம் ஆண்டு அல்கொய்தா தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. இதற்கு பதிலடி தரும் விதமாக ஆப்கானிஸ்தானில் உள்ள அல்கொய்தா தீவிரவாதிகள்மீது அமெரிக்கா தாக்குதல்நடத்தியது. பின்னர் அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு ஆப்கானிஸ்தானில் பதவி ஏற்றதுடன், அமெரிக்க ராணுவம் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டன. இதனிடையே, டிரம்ப்பின் முதல் ஆட்சி காலத்திலேயே ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. தொடர்ந்து 2021ம் ஆண்டு ஜோ பைடன் ஆட்சியின்போது ஆப்கானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறின. தொடர்ந்து தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றி ய பிறகு பக்ராம் விமான தளத்தில் இருந்த அமெரிக்க வீரர்கள் அனைவரும் வெளியேறினர்.*

*இந்தியாவில் முதன்முறையாக பொதுப் போக்குவரத்துகளை ஒன்றாக இணைக்கும் வகையில் உருவாக்கிய ஊாநயெை மூநெ மொபைல் செயலியை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!!'*

*இந்நிலையில் பக்ராம் விமான தளத்தில் மீண்டும் அமெரிக்க படைகளை குவிக்க திட்டமிட்டுள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப், அந்த விமான தளத்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், "பக்ராம் விமான தளம் உலகிலேயே மிகவும் வலிமை வாய்ந்தது. மேலும், சீனா அணு ஆயுதங்களை தயாரிக்கும் இடத்தை ஒரு மணி நேரத்திலேயே அடையக்கூடிய தொலைவில் பக்ராம் விமான தளம் உள்ளதால் அது முக்கியத்துவம் வாய்ந்தது. அதை ஜோ பைடன் விட்டு கொடுத்திருக்க கூடாது.*

*பைடன்திறமையற்றவர். அந்த விமான தளத்தை அமெரிக்காவிடம் தாலிபன் அரசு ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்" என பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். டிரம்ப்பின் கோரிக்கைக்கு தலிபான் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து தலிபான் தலைமை செய்தி தொடர்பாளர் ஜபிஹூல்லா முஜாஹித் தன் எக்ஸ் பதிவில், "யதார்த்தவாதம் மற்றும் பகுத்தறிவு கொள்கையை அமெரிக்கா ஏற்று கொள்ள வேண்டும்.*

*ஆப்கானிஸ்தானின் சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மிக முக்கியமானது என்பதை அனைத்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளின்போதும் அமெரிக்காவுக்கு தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது. மேலும், தோஹா ஒப்பந்தத்தின் கீழ், ஆப்கானிஸ்தானின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்துக்கு எதிராகவோ, அல்லது அதன் உள்விவகாரங்களில் தலையிட மாட்டோம் என அமெரிக்கா உறுதி அளித்ததை டிரம்ப் நினைவில் கொள்ள வேண்டும். அமெரிக்கா தன் உறுதிமொழிகளுக்கு உண்மையாக இருக்க வேண்டும்" என கூறி உள்ளார். (ஐ)*

## நேபாள வன்முறை பலி 72 ஆக உயர்வு் துப்பாக்கிச்சூட்டுக்கு உத்தரவிடவில்லை: மாஜி பிரதமரின் விளக்கத்தால் பரபரப்பு



நேபாளத்தில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி மறுத்துள்ளதுடன், இதுகுறித்து விசாரணை நடத்தவும் கோரியுள்ளார். நேபாளத்தில் சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தடை மற்றும் ஊழலுக்கு எதிராக 'ஜென் இசட்' என்ற இளையோர் குழுவினர் நடத்திய மாபெரும் போராட்டங்களால் நாடு தழுவிய அளவில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறை சம்பவங்களில் 3 காவலர்கள் உட்பட 72 பேர் உயிரிழந்தனர்.

போராட்டக்காரர்கள் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை, பிரதமர் இல்லம் உள்ளிட்ட அரசு கட்டிடங்களுக்கு தீவைத்ததால் பதற்றம் அதிகரித்தது. இதையடுத்து, பிரதமர் கே.பி. சர்மா ஒலி கடந்த 9ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். புதிய இடைக்கால பிரதமராக கார்க்கி பதவியேற்றதை தொடர்ந்து, ஊரடங்கு தளர்த்தப்பட்டு தற்போது நேபாளத்தில் படிப்படியாக இயல்பு நிலை திரும்பி வருகிறது.

இந்நிலையில், போராட்டத்தை முன்னெடுத்த 'ஜென் இசட்' குழுவினர் முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி மற்றும் முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லேக்கக்கை உடனடியாக கைது செய்ய வேண்டும்என்பது உள்ளிட்ட இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அக்குழுவின் ஆலோசகர்களில் ஒருவரான டாக்டர் நிக்கோலஸ் புஷால், 'கடந்த 8ம் தேதி நடந்த துப்பாக்கிச்சூட்டில் 19 பேர் கொல்லப்பட்டதற்கு முன்னாள் பிரதமர் ஒலி, அமைச்சர் ரமேஷ் லேக்கக் ஆகியோரே நேரடி பொறுப்பு. எனவே அவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டார்.


இதனிடையே, அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்ட முன்னாள் பிரதமர் ஒலி, 'ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த அரசு உத்தரவிடவில்லை' என்று திட்டவட்டமாக மறுத்துள்ளார். மேலும், 'காவல்துறையினரிடம் இல்லாத தானியங்கி துப்பாக்கிகளால் போராட்டக்காரர்கள் மீது குண்டுகள் சுடப்பட்டுள்ளன. அமைதியான போராட்டத்தில் ஊடுருவியவர்களே வன்முறைக்கு காரணம். எனவே, இதுகுறித்து கட்டாயம் விசாரிக்கப்பட வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## இந்தியா–பாக். உள்ளிட்ட 7 போர்களை நிறுத்திய எனக்கு 7 நோபல் பரிசு தர வேண்டும்: டிரம்ப்

இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியது நான்தான் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். ஆனால், பாகிஸ்தானுடனான போரை நிறுத்தியதில் மூன்றாம் நபரின் தலையீடு இல்லை என்று இந்தியா மறுத்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவில் நடந்த நிகழ்ச்சியில் டிரம்ப் நேற்று முன்தினம் பேசியதாவது: உலக அரங்கில், மதிக்கப்படும் பல விஷயங்களை செய்கிறோம்.

சமாதான உடன்படிக்கைகளை ஏற்படுத்துகிறோம். இந்தியா-பாகிஸ்தான், தாய்லாந்து-கம்போடியா இடையேயான போர்களை நிறுத்தினோம். அர்மீனியா-அஜர்பைஜான், கொசோவோ- செர்பியா, இஸ்ரேல்- ஈரான், எகிப்து- எத்தியோப்பியா, ருவாண்டா- காங்கோ நாடுகள் இடையே எழுந்த போர்களை நாங்கள் நிறுத்தினோம். ரஷ்யா-உக்ரைன் மோதலை நிறுத்த முடிந்தால் நோபல் பரிசு கிடைக்கும் என்று என்னிடம் சொல்லப்பட்டது.

ஆனால் நான் 7 போர்களை நிறுத்தி இருக்கிறேன். ஒவ்வொன்றிற்கும் எனக்கு நோபல் பரிசு கிடைக்க வேண்டும் என்று நான்சொன்னேன். ஆனால்ரஷ்யா-உக்ரைன் போரை நீங்கள் நிறுத்தினால் நோபல் பரிசு பெற முடியும் என்று சொன்னார்கள். அதையும் செய்து முடிப்பேன் என்றார். (ஐ)



## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீள்புனரமைத்துப் பாதுகாக்க முடியவில்லை எனவும் தொல்லியல் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகரர், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், க.இளங்குமரன் ஆகியோர் மந்திரிமனையைப் பார்வையிட்டு, அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் என உறுதி அளித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் "இலங்கை அரசே தமிழர்களின் மரபுரிமை சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடு", "தொல்லியல் திணைக்களமே. பௌத்த சின்னங்களைப் பாதுகாப்பது போல் தமிழரின் மரபுரிமை சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடு", "மன்னன் சொத்து மக்கள் சொத்து" போன்ற கோஷங்களை எழுப்பி மந்திரிமனை முன்பாக இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தின. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் அமைச்சின் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், யாழ். மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், தொழில் அமைச்சின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கணக்கியல் துறை, காப்புறுதித்துறை, சந்தைப்படுத்தல் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஹோட்டல் துறை, கணினித்துறை பயிற்சி நெறி, தாதியர் பயிற்சி நெறி, ஆடைத் தொழிற்சாலை, பாதுகாப்புச் சேவை, சுப்பர் மார்க்கெட் மற்றும் தனியார் உற்பத்தி நிறுவனங்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தொழிற்சந்தையில் கலந்துகொண்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு குறித்த தொழிற்சந்தை நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்று யாழ். மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.

தொழிற்சந்தையில் பங்கேற்பதற்காகப் பெருமளவில் இளைஞர், யுவதிகள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தார் என்று நுவரெலியா பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் நுவரெலியாவின் ஹாவா எலியா பகுதியைச் சேர்ந்த மனித் அபுர்வ என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இராகலை - நுவரெலியா பிரதான வீதியில் ஹாவா எலியா சந்தியில் நேற்று இரவு 9:30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நுவரெலியா பொலிஸின் போக்குவரத்து அதிகாரிகள், தனது வீட்டில் இருந்து நுவரெலியா நகருக்குள் தனது மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர், அந்தச் சந்தியில் இருந்து நுவரெலியா நகருக்குள் செல்ல முற்பட்டபோது, இராகலையில் இருந்து நுவரெலியா நோக்கி அதிவேகமாகச் சென்ற லொறி மீது மோதியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகத்தின் பேரில் லொறியின் சாரதியை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இளைஞரின் 21 ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

இவர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த சகோதர இனத்தைச் சேர்ந்த பிராந்திய செய்தியாளர் சம்பத் ஜெயலாலின் ஒரே மகன் ஆவார்.

## பாலஸ்தீனத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் பாலஸ்தீன விவகாரம் முக்கிய பேசுபொருளாக மாறவுள்ளது.

பிரான்ஸ், கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தமது தீர்மானத்தை குறித்த தொடரில் அறிவிக்கவுள்ளன.

இந்நிலையிலேயே பாலஸ்தீன விடுதலைக்குரிய ஆதரவை இலங்கை ஜனாதிபதியும் வெளிப்படுத்துவார் எனத் தெரியவருகின்றது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் இன்று அமெரிக்கா நோக்கி பயணமாகின்றனர்.

இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்குப் பாலஸ்தீன ஜனாதிபதிக்கு அமெரிக்காவால் விசா மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் உரையாற்றுவதற்கு அனுமதிக்கும் பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலகத் தலைவர்களுடன் இந்த விஜயத்தின்போது அநுரகுமார திஸாநாயக்க இரு தரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார். அதேபோல் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் உலக நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்திக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அமெரிக்கா வாழ் இலங்கை சமூகத்தினரையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்திக்கவுள்ளார்.

அமெரிக்காவில் இருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி ஜப்பானுக்கான தனது அதிகாரபூர்வ பயணத்தை ஜனாதிபதி அநுரகுமார ஆரம்பிக்கவுள்ளார்.

28 ஆம் திகதி ஜப்பான் பிரதமர் மற்றும் ஜப்பான் பேரரசர் ஆகியோருடன் சந்திப்புகளை அவர் நடத்துவார். இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்புவார்.

# எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அச்சமடைய போவதில்லை– அமைச்சர் பிமல் ரத்நாயக்க!

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அச்சமடைய போவதில்லை- என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அம்பாறை பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெறிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் திருடர்கள், ஊழல்வாதிகள் என்று ஒருவரையொருவர் தூற்றிக்கொண்டவர்கள் இன்று ஒரே மேடையில் ஒன்றிணைந்துள்ளார்கள்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நாம் ஒருவரை ஒருவர் திருடர் என்று விமர்சித்துக்கொண்டோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். இதனை மக்கள் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

எதிர்வரும் காலப்பகுதியில் நடைபெறும் தேர்தல்களின் போது தற்போது ஒன்றிணைந்துள்ள திருடர்கள் அனைவரையும் ஒருமித்த வகையில் தோற்கடிக்க முடியும்.

திருடர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்களின் அரசியல் தீர்மானத்தை இலகுபடுத்தியுள்ளார்கள்.

மக்களின் பிரச்சினைகளுக்காகவா எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்துள்ளார்கள். இல்லை, சட்டத்தில் இருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது, எதிர்காலத்தில் தமது அரசியலை எவ்வாறு வலுப்படுத்திக்கொள்வது என்பதற்காகவே தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள்.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அச்சமடைய போவதுமில்லை, காலத்தை வீணடிக்க போவதுமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் ஒன்றிணைந்தவர்களிடமும் ஒருமித்த தன்மை இல்லை.

குப்பைமேட்டை போன்றதாகவே எதிர்க்கட்சிகளின் தற்போதைய ஒன்றிணைவு காணப்படுகிறது. எதிர்க்கட்சியினர் எதிர்காலத்திலேனும் தேர்தலில் வெற்றிப்பெற வேண்டுமாயின் மக்களாணையை விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி பக்கம் உள்ளார்கள் என மேலும் தெரிவித்தோருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்விநியோகம் தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்!

மின்விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளையும்அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சாதாரண பொது வாழ்க்கையைப் பராமரிப்பது அவசியம் என்பதையும், அந்த சேவைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இன்று நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் டெண்டர் செயல்முறைகளில் இருந்து விலகி, தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# ஜயகத்புர கடற்கரையில் நிர்வாண நிலையில் கரையொதுங்கிய சடலம்!

மொரட்டுவை, எகொடஉயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோதர, ஜயகத்புர கடற்கரையில் நிர்வாண நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த சம்பவம் இன்று (22) காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 50 முதல் 60 வயதுக்குட்பட்டவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் இறந்தவர் தொடர்பிலான விபரம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக கின்றனர்.

# சட்டவிரோத அகழ்வில் ஆடுபட்ட பெண் கைது!

எத்திமலை பொலிஸ் பிரிவின் கெமுனுபுர பகுதியில் சட்டவிரோத அகழ்வில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எத்திமலை - கெமுனுபுர பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

புதையல் தோண்டும் நோக்கில் அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், எத்திமலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், சம்பவ இடத்தில் இருந்த மற்றொரு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதுடன், அவருக்குச் சொந்தமானது என்று சந்தேகிக்கப்படும் ஒரு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சக்ம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை எத்திமலை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# துப்பாக்கி ரவைகள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் சர்வதேச விளையாட்டு மைதானம் அமையவுள்ள காணிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் நீதிமன்ற அனுமதியுடன் இன்று மீட்கப்பட்டுள்ளன.

மண்டைதீவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் நிலத்தில் புதையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்க அனுமதி கோரி ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் துப்பாக்கி ரவைகளை அகழ்ந்து எடுக்கும் பணிகளை இன்று முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதித்ததைத் தொடர்ந்து துப்பாக்கி ரவைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

# சஷீந்திரவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 22

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமற ியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சஷீந்திர ராஜபக்ஷ இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சஷீந்திர ராஜபக்ஷவின் பிணை மனுவைக் கொழும்பு பிரதான நீதவான் நிராகரித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2025 வெளியிடப்பெற்றது.